செ.வெ.எண்: 43 நாள்: 23.01.2018

## பத்திரிக்கை செய்தி

சீருடைப்பணியாளர் தேர்வு வாரியம் மூலம் இரண்டாம் நிலைக் காவலர் பணியிடம் உள்பட மொத்தம் 6094 பணியிடங்கள் போட்டித் தேர்வு மூலம் தேர்வு செய்ய விளம்பரம் வெளியிடப்பட்டுள்ளது. இப்பணியிடங்களில் முன்னாள் படைவீரர்களுக்கு 5% ஒதுக்கீடு மற்றும் வயது வரம்பு சலுகை உள்ளது. முன்னாள் படைவீரர்களைச் சார்ந்தோர்களுக்கு முன்னுரிமை உள்ளது. கல்வித் தகுதி பத்தாம் வகுப்பு மற்றும் அதற்கு மேல் தேர்ச்சி பெற்றோர் தங்களது விண்ணப்பத்தினை விண்ணப்பிக்க கடைசி தேதி 27.01.2018 ஆகும்.

இது குறித்து மேலும் விவரத்தினை www.tnusrb.tn.gov.in என்ற இணையதள முகவரியில் அறிந்து இம்மாவட்டத்தைச் சேர்ந்த முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தோர்கள் இப்பணியிடங்களுக்கு அதிக அளவில் விண்ணப்பித்து பயனடையலாம்.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**